# அமெரிக்க தூதரகத்தில் போராளிகள் பாய்ச்சல்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




அற்புதன் எழுதுவது

அரசியல் தொடர்

# யாழ்ப்பாணத்தில் அமெரிக்க தம்பதி கடத்தல்!


டி.ஜி.பி. மோகனதாஸ்

### பாலகுமாரின் தந்திரம்

சென்னை 'பிரசிடென்சி' ஹோட்டலில் இருந்து பிரபாகரன் தனது காரில் புறப்பட்டு சென்றுவிட்டார்.

பத்மநாபாவும் தனது காரில் புறப்பட ஆயத்தமானபோதுதான் ஈரோஸ் உறுப்பினர் ஓடி வந்தார்.

மேலே ஹோட்டல் அறையில் இருந்த பாலகுமாரும், சிறீ சபாரத்தினமும் அந்த உறுப்பினர் மூலம் ஒரு தகவல் அனுப்பியிருந்தனர்.

பத்மநாபாவை தங்களை வந்து சந்திக்கும்படிதான் தகவல் அனுப்பியிருந்தனர்.

பத்மநாபா அங்கு மீண்டும் சென்றார்: "கூட்டமைப்பு பெயரை மாற்றுவது பிரச்சனையில்லை என்று கூறிவிட்டீர்கள். அப்படிப் பெயரை மாற்றினால் புலிகள் புதிய கூட்டமைப்பை உருவாக்கியதாக கருதப்பட்டு விடும். சிறீ சபாரத்தினமும் இதையே சொல்கிறார்."

என்றார் பாலகுமார். பிரபாகரனும் பத்மநாபாவும் கீழே சென்றபோது சிறீ சபாரத்தினத்தின் மனதை மாற்றிவிட்டார் பாலகுமார். எனவே பாலகுமாரின் கருத்தை சிறீயும் ஆமோதித்தார்.

பெயரை மாற்றுவதில்லை என்ற முடிவுக்கு பத்மநாபாவும் சம்மதித்தார்.

இதன்பின்னர் சில நாட்கள் கழித்து அடுத்த சந்திப்பு நடைபெற்றது.

அதில் பிரபா கலந்துகொள்ளவில்லை. புலிகள் சார்பாக அன்ரன் பாலசிங்கமும், இராசநாயகமும் கலந்துகொண்டனர்.

பெயர் பிரச்சனை மீண்டும் எழுந்தது. அன்ரன் பாலசிங்கம் சில கருத்துக்களைத் தெரிவித்தார்.

"தம்பி ஒற்றுமைக்கு தயாராக இருக்கிறார். தம்பியை சுற்றியிருக்கும் சிலர் இதனை விரும்பவில்லை. நானும் இராசநாயகமும் தம்பியோடு கதைத்து அவரை உடன்படச் செய்திருக்கிறோம். இந்த நிலையில் கூட்டமைப்பு பெயர் ஈழத் தேசிய விடுதலை முன்னணி என்று இருந்தால் எங்களுக்குள் பிரச்சனை வரும். ஏன் 'தமிழ் ஈழம்' என்று போடவில்லை என்று கேட்பார்கள். அதனால் 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி-புலிகள் கூட்டமைப்பு' என்று அழைத்துக் கொள்வோம்."

என்றார் பாலசிங்கம். நீண்ட விவாதத்தின் பின்னர் பாலசிங்கத்தின் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### கையொப்பம் வரும்

தம்பியைச் சுற்றியிருப்பவர்களில் சிலர் ஒற்றுமை முயற்சியில் நம்பிக்கை கொள்ளவில்லை என்று பாலசிங்கம் கூறியதில் உண்மை இல்லாமல் இல்லை.

கூட்டமைப்பு சார்பாக பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் விடுக்கப்படுவதுண்டு.

புலிகளது சார்பில் அறிக்கைகளில் கையொப்பமிடுபவர் பேபி சுப்பிரமணியம்.

பேபி சுப்பிரமணியம்தான் அப்போது புலிகளது அரசியல் செயலாளராக இருந்தார்.

கூட்டமைப்பு கூட்டத்திற்கு ஒருநாள்கூட பேபி சுப்பிரமணியம் சென்றது கிடையாது.

கூட்டமைப்பு அறிக்கையை பாலசிங்கம் கொண்டுசென்று பேபி சுப்பிரமணியத்திடம் கையொப்பம் வாங்கிவந்து கொடுப்பார்.

பிரபா நினைத்திருந்தால் பாலசிங்கத்தை கையொப்பம் போடுமாறு கூறியிருக்கலாம். ஆனால் பேபி சுப்பிரமணியம் அரசியல் செயலாளராக இருப்பதால் அவர்தான் கையொப்பமிட வேண்டும் என்பதில் மாற்றம் ஏற்படுத்த பிரபா விரும்பவில்லை.

இது மட்டுமல்ல; 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் விரிவுரையாளர் நித்தியானந்தன் பல ஆக்கங்களை எழுதிக் கொண்டிருந்தார்.

அவர் எழுதும் ஒவ்வொரு ஆக்கங்களையும் பேபி சுப்பிரமணியம் பார்வையிட்டு அனுமதி கொடுத்த பின்னரே அச்சேற வேண்டும் என்பது பிரபாவின் உத்தரவு.

இது குறித்து நித்தியானந்தன் வருத்தப்பட்டதும் உண்டு.

நித்தியானந்தன் போன்றவர்கள் வருவார்கள்-போவார்கள். பேபி சுப்பிரமணியம் போன்றவர்கள் என்றும் தன்னோடு இருப்பார்கள் என்பது பிரபாவின் கருத்து.

விரிவுரையாளர் நித்தியானந்தன் புலிகளில் இருந்து பின்னர் விலக்கப்பட்டார். பேபி சுப்பிரமணியம் 'இளம்குமரன்' என்ற பெயரில் இப்போதும் புலிகள் அமைப்பில் இருக்கிறார்.

கூட்டமைப்பு, ஒற்றுமை முயற்சிகள் பற்றி பின்னர் மீண்டும் பார்க்கலாம்.

1984ல் நடந்த முக்கியமான சில சம்பவங்கள் பற்றி இப்போது கூறுகிறேன்:

### சி.ஐ.ஏ.

தமிழ் பேசும் மக்களது போராட்டத்தை நசுக்க இலங்கை அரசுக்கு அமெரிக்கா உதவுகிறது என்று இயக்கங்கள் குற்றம்சாட்டி வந்தன.

இதில் முன்னணியில் நின்றது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. இலங்கை அரசுக்கு பக்கபலமாக இருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரசாரம் செய்து வந்தது.

1984ம் ஆண்டு சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். திட்டமிட்டது.

ஒரு நாள் பத்து மணிக்கு அமெரிக்கத் தூதரகம் முன்பாக மூன்று ஒட்டோக்களில் சென்று இறங்கினார்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள்.

தூதரக வாயிலில் துப்பாக்கியோடு காவலர்கள் நிற்பார்கள். உள்ளே செல்ல அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

எப்படியாவது உள்ளே சென்றுவிட வேண்டும். தூதரக வளவில் வைத்து அமெரிக்கக் கொடியை எரிக்க வேண்டும் என்பதுதான் திட்டம்.

ஒட்டோவில் இருந்து இறங்கியவுடன் காவலரை நோக்கி ஓடிய ரமேஷின் கையில் ஒரு சிறிய கமரா இருந்தது. அதனை காவலருக்கு நேராக நீட்டி மிரட்டியவுடன் காவலர்கள் துப்பாக்கியைப் போட்டுவிட்டு உள்ளே ஓடிவிட்டனர்.

கமராவை சிறிய துப்பாக்கி என்று காவலர்கள் நினைத்துவிட்டார்கள்.

உள்ளே புகுந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள். சிறிய ஒலிபெருக்கி மூலம் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார் டேவிட்சன்; கொடிக்கு தீவைத்தார் தயாபரன். அதற்கிடையில் பொலிசாருக்கு தகவல் சென்றுவிட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆரின் உத்தரவின்படி அன்று மாலையில் கைதானவர்கள் விடுதலையாகினர்.

அன்றுமுதல் சென்னையில் அமெரிக்க தூதரகம் முன்பாக பொலிஸ் டிரக் ஒன்று ஆயுதம்தரித்த பொலிஸாரோடு காவலுக்கு நிறுத்தப்பட்டது. தூதரகப் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டது.

தூதரகம் ஒன்றுக்குள் நுழைவது பாரதூரமான குற்றம். அத்துமீறி நுழைபவர்களை சுட்டுத்தள்ளவும் அங்கிருக்கும் காவலர்களுக்கு உரிமை இருக்கிறது. அதனை தூதரகம் அமைந்துள்ள நாடுகூட கேட்க முடியாது.

அன்று காவலர்கள் பயந்திருக்காவிட்டால் தூதரகத்தில் நுழைந்தவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்திருக்க முடியும்.

அமெரிக்க எதிர்ப்பில் முன்நின்ற இயக்கமாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் அடையாளம் காணப்பட்டது.

### தம்பதி மீது குறி

யாழ்ப்பாணத்திலும் சி.ஐ.ஏ. உளவுப்பிரிவு ஊடுருவியிருப்பதாக சந்தேகம் நிலவியது.

உதவித் திட்டங்கள், அபிவிருத்தி ஆராய்ச்சிகள் என்ற போர்வையில் சி.ஐ.ஏ. உளவுப்பிரிவினர் நடமாடுவதாக ஈ.பி.ஆர். எல்.எஃப். சந்தேகப்பட்டது.

அவ்வாறான சந்தேகத்தில் சிக்கிக் கொண்டனர் அலென் தம்பதியினர்

யாழ்ப்பாணத்தில் குருநகர் இராணுவ முகாமுக்கு அருகில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அவர்கள் தங்கியிருந்தனர்.

அலென் தம்பதியை கடத்திச் சென்று பணயக்கைதிகளாக்குமாறு ஈ.பி.ஆர். எல்.எஃப் மக்கள் விடுதலைப்படை தளபதியாக இருந்த டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டார்.

1984ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி இரவு அலென் தம்பதியின் வீட்டுக்குள் புகுந்தனர் மக்கள் விடுதலைப் படை உறுப்பினர்கள்.

வீட்டுக்கு முன்னால் இராணுவ முகாம். காவலுக்கு நின்ற இராணுவத்தினரின் கண்களில் படாமல் காரியத்தை முடிக்க வேண்டும்.

தமது இரவுணவை முடித்துவிட்டு படுக்கையறையில் உல்லாசமாக இருந்தனர் அலென் தம்பதியினர்.

சில பூசைக்குள் கரடி நுழைந்தது போல திடீரென்று கதவு தட்டப்பட்டது.

துணியொன்றை இடுப்பில் சுற்றிக் கொண்டுவந்து கதவைத் திறந்தார் அலென்.

அவரை துப்பாக்கி முனையில் மடக்கினார்கள். திருமதி மேரி அலெனும் துணிகளை அள்ளிச் சுற்றிக் கொண்டு ஓடிவந்தார்.

இருவரையும் மாற்று உடை அணிந்துவருமாறு கூறப்பட்டது. பின்னர் ஒரு வாகனத்தில் தம்பதியினர் மறைவிடம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

### கோரிக்கைகள்

"20 போராளிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்."


"5 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள தங்கம் தரப்பட வேண்டும்."

என்று மறுநாள் அரசுக்கு அறிவிக்கப்பட்டது. விடுதலை செய்யப்பட வேண்டிய போராளிகளது பெயர்களும் அரசுக்கு தெரிவிக்கப்பட்டன.

ஜே.ஆர்.அரசு திகைத்துப் போனது. உலகெங்கும் செய்தி பரவியது.

இலங்கையில் இருந்த வெளிநாட்டவர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளானது.

யாழ்ப்பாணத்திலிருந்த வெளிநாட்டவர்கள் அனைவரும் பொலிஸ் பாதுகாப்போடு கொழும்புக்கு கூட்டிச் செல்லப்பட்டனர்.


டக்ளஸ் தேவானந்தா

அமெரிக்க அரசு தனது பிரஜைகள் பற்றிய கவலையை இலங்கை அரசுக்கு தெரிவித்தது.

பொலிசாரும், இராணுவத்தினரும் யாழ்ப்பாணத்தில் சல்லடை போட்டுத் தேடினார்கள். பயன் இல்லை.

இலங்கை அரசு இந்தியாவின் ஒத்துழைப்பை கோரியது. ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபாவும், மக்கள் விடுதலைப்படை பிரதம தளபதி டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் நாட்டில் இருந்தனர். அவர்களோடு இந்திய அரசு தொடர்பு கொண்டு உதவவேண்டும் என்று இலங்கை அரசு கேட்டுக்கொண்டது.



### தமிழகத்தில் கைது

கடத்தப்பட்ட அலென் தம்பதி யாழ்ப்பாணத்தில்தான் ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்தார்கள். கடத்தப்படவர்கள் தமிழ்நாட்டுக்கோ அல்லது பாகிஸ்தானுக்கோ கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று இலங்கை அரசு நம்பியது.

இந்திய அரசும்கூட அலென் தம்பதியினர் தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றே நினைத்தது.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி அலென் தம்பதி விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அக்கறை காட்டினார்.

தமிழ்நாட்டில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எஃப். முக்கியஸ்தர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சுரேஸ் பிரேமசந்திரனை கைதுசெய்த தமிழக இரகசியப் பொலிசார் அவரிடமிருந்த டயரியை துருவி ஆராய்ந்தனர்.

பத்மநாபாவையும், டக்ளஸ் தேவானந்தாவையும் எப்படியாவது கைதுசெய்துவிட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம்.

பத்மநாபா அப்போது டில்லியில் இருந்தார். அங்கிருந்தால் கைதுசெய்யப்படலாம் என்பதால் விமானம் மூலமாக சென்னை திரும்பினார்.

இதனை அறிந்துவிட்ட தமிழக பொலிசின் உளவுப்பிரிவினர் விமான நிலையத்தின் முன்பாக காத்திருந்தனர். பத்மநாபாவை அழைத்துச் செல்ல வந்த அவரது கார்மீது உளவுப் பிரிவினரது கழுகுப் பார்வை பதிந்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஒரு உளவுப்பிரிவு வைத்திருந்தது. மக்கள் ஆய்வுப் பிரிவு (MAP) என்பது அதன் பெயர். இந்தியாவில் அதற்கு பொறுப்பாக இருந்தவர் ரமேஷ்.

விமான நிலையத்தில் வந்திறங்கிய பத்மநாபாவை வேறு ஒரு காரில் ரமேஷ் அழைத்துச் சென்றுவிட்டார். மக்கள் ஆய்வுப் பிரிவின் மறைவிடத்திற்கு பத்மநாபா அழைத்துச் செல்லப்பட்டார்.

### முற்றுகை

தமிழ் நாட்டில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எஃப்.அமைப்பின் தங்குமிடங்கள் யாவும் தமிழக உளவுப்பிரிவுக்கு நன்கு தெரியும். ஆனால் மக்கள் ஆய்வுப் பிரிவின் மறைவிடம் மட்டும் தெரிந்திருக்கவில்லை.

சுரேஸ் பிரேமசந்திரனின் டயறியில் மக்கள் ஆய்வுப் பிரிவின் தொலைபேசி இலக்கம் இருந்தது. அதனை வைத்து முகவரி கண்டுபிடித்து தமிழக பொலிசின் உளவுத்துறை இரவு 12 மணிக்கு அந்த மறைவிடத்தை முற்றுகையிட்டது.

பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ், மக்கள் ஆய்வுப் பிரிவு பொறுப்பாளர் மணி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா, சுரேஸ் பிரேமசந்திரன் ஆகியோரை தனியாக வைத்து தமிழக உளவுத்துறை விசாரித்தது.

தமிழக பொலிஸ் துறை டி.ஜி.பியாக அப்போதிருந்தவர் மோகனதாஸ்.

மோகனதாசும் ஒரு சி.ஐ.ஏ அனுதாபி என்றே அப்போது கருதப்பட்டார்.

தமிழ்நாட்டில் இருந்த ஈழப் போராளிகள் பற்றிய விபரங்களை மோகனதாஸ் இலங்கை அரசுக்கு கொடுத்து உதவுவதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

எனவே-மோகனதாசின் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் டக்ளஸ் தேவானந்தாவும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் முரண்டு பிடித்தனர்.

### இந்திரா வேண்டுகோள்

இலங்கையில் அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் அத்துலத் முதலி.

இந்திய அரசின் முயற்சி தோல்வியடைந்தால் போராளிகளது கோரிக்கைக்கு இணங்க அவர் தயாராக இருந்தார்.

போராளிகளால் விடுதலை செய்யுமாறு கேட்கப்பட்ட 20 அரசியல் கைதிகளும் பலாலி விமானநிலையத்திற்கு கொண்டுவரப்பட்டு, விடுவிக்கப்பட தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அலென் தம்பதியை விடுதலை செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்களுக்கு தெரியப்படுத்தினார்.

இந்திரா காந்தியின் விருப்பத்தை மீறுவது சரியல்ல . என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்கள் முடிவு செய்தனர்.

அந்த முடிவை மக்கள் விடுதலைப்படை தளபதி டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தவுடன் அலென் தம்பதி விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை அரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

அலென் தம்பதி கடத்தல் நடவடிக்கையில் ரெக்ஸ், மோகன், குமார், இந்திரன், ரோகன், ஆகியோரும் பங்குகொண்டனர்.

### மோகனதாசின் துள்ளல்

தமிழக பொலிஸ் டி.ஜி.பியாக இருந்து ஓய்வு பெற்ற மோகனதாஸ், 1992இல் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார்.

'எம்.ஜி.ஆர். நிஜமும்-நிழலும்' என்பது அதன் பெயர்.

அந்தப் புத்தகத்தில் அலென் தம்பதி கடத்தல் விடயத்தில் தமிழக பொலிஸ் எடுத்த நடவடிக்கைகள் பற்றி உண்மைக்கு மாறான தகவல்களை தெரிவித்துள்ளார்.

தனது மிரட்டல்களால் தலைவர்கள் பணிந்தனர் என்று அவர் கூறியிருப்பதில் சுயதம்பட்டம் மட்டுமே இருக்கிறது.

தமிழ்நாட்டில் அப்போதிருந்த சூழலில் எந்தவொரு போராளி அமைப்பையும் பொலிசார் மிரட்ட இயலாது. அந்தளவுக்கு தமிழக மக்களது பேராதரவு இருந்தது.

(தொடர்ந்து வரும்)